இங்கே கூடியிருக்கும் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கம்,

பலவிதமான கோணங்களில் இருந்து எமது தேசியக் கேள்வியை அணுகிவருகின்ற பலரையும் இங்கே ஒரே மேடைக்கு மூத்த அரசியல் ஆய்வாளர் மு. திருநாவுக்கரசு அவர்களின் நூல் அறிமுகம் கொண்டுவந்து சேர்த்திருக்கிறது.

இந்த வகையான மேடையில், ஒரு மரபுவழி அரசியல்வாதியாக அல்லாது, கட்சித் தளங்களுக்கு அப்பாற்பட்டும், அப்பாற்படுத்தப்பட்டும் ஓர் அரசியற் போராளியாக இயங்கிவரும் என்னையும் அழைத்தமைக்கு இந்த நிகழ்வின் ஏற்பாட்டாளர்களுக்கு முதலில் நன்றி தெரிவித்து, எனது கருத்துக்களை இங்கு முன்வைக்கவிழைகின்றேன்.

ஓர் ஈழத்தமிழ்ப்பெண்ணாக, பொதுவேலையில் ஈடுபட்ட ஓர் அரச ஊழியராக, அர்ப்பணிப்போடும் துணிவோடும் கடமையாற்றிய ஒரு அரசியற் பொறுப்பாளரின் துணைவியாக, ஈழத்து மண்ணில் சுதந்திரக் காற்றைச் சுவாசித்த அனுபவத்தைச் சேர்த்துவைத்திருக்கும் ஒருத்தியாக, மூன்று பெண் குழந்தைகளின் தாயாக, 2009 இன அழிப்புப் போரின் கொடூரங்களை நேரில் தரிசித்த சாட்சியமாக இருந்த நான், போர் முடிந்த பின்னர் எனது கணவர் என் கண்முன்னலேயே இலங்கை இராணுவத் தினால் கையகப்படுத்தப்பட்டு பின்னர் காணாமலாக்கப்பட்டிருக்கும் நிலையில் நீதிகேட்டு எனது குரலை உயர்த்தியபோது, என்னைப் போன்ற அனைவருக்காகவும் குரல் கொடுக்கவேண்டியவளாக, சர்வதேச நீதிக்கான எனது பயணத்தை ஆரம்பித்தேன். இதன் பின்னர் தான் நான் நேரடியான அரசியலைத் தரிசிக்க வேண்டி ஏற்பட்டது.

வடமாகாணசபைக்குள் இருக்கும் அரசியலில் இருந்து, தமிழரசுக் கட்சியின் அடியிலிருந்து முடிவரையும், மற்றும் வடக்கிலும், தெற்கிலும், தமிழ்நாட்டிலும், ஈழத்தமிழர் புலம் பெயர்ந்திருக்கும் திசைகளிலும் நடை பெறும் அரசியலையும், ஊடகப் போக்குகளையும், போராட்டத்தையும் குறிப்பாக சர்வதேச சமூகத்தையும் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக நேரடியாகத் தரிசித்து வந்திருக்கிறேன். மலேசியாவில் இருந்து ஐரோப்பா மற்றும் அமெரிக்காவரை சென்று நிலைமைகளை, சில வருடங்கள் என்றாலும், நேரில் பார்த்து வந்தவகையிலான எனது பட்டறிவில் இருந்தே மு. திருநா அவர்களின் நூல் சொல்லும் செய்தியையும் அதற்கு அப்பால் என்ன என்ற சில சிந்தனைகளையும் இங்கே முன்வைக்கவேண்டி யிருக்கிறது.

அரசியல் ஆய்வாளர்கள் ஒவ்வொருவரும் தமக்கே உரிய பாணியில், தாமிருக்கும் சூழலுக்குள் இருந்து பிரச்சனைகளை ஆராய்பவர்களாக, தமது கருத்துக்களை வெளிப்படுத்துவார்கள். திருநா அவர்களின் சிந்தனை

வீச்சு தாமிருக்கும் சூழலில் இருந்தும் தாயகத்தில் வேரூன்றியிருக்கிறது என்பதை வெளிப்படுத்தியிருக்கிறது.

இந்தியா ஈழத்தமிழரின் போராட்ட இலக்குக் குந்தகமாக இருக்கும் என்ற சிந்தனையை வெளிப்படுத்தி 1980களின் ஆரம்பத்தில் திருநா அவர்கள் வெளியிட்ட நூல் கணிசமான கருத்துத் தாக்கத்தை ஏற்படுத்திய ஒன்றாகும்.

இதன் பின்னர் ஜே ஆரால், ஜே ஆருக்காக என்றும் சமஸ்டியா தனிநாடா என்றும் சில அரிய நூல்களை அவர் எழுதியிருக்கிறார்.

இந்தியா குறித்த 1980களில் அவர் முன்வைத்த கருத்து போராளிகளால் கணிசமாக உள்வாங்கப்பட்டிருந்தது. ஆனாலும், இந்திய உளவுப் பொறியின் கைகளுக்குள் இயக்கங்கள் பலவும் பறிபோயின.

இந்திய இராணுவம் இங்கே வந்தபோது போராளிகள் பின்வரப்போகும் ஆபத்தை முற்கூட்டியே உணர்ந்திருந்தார்கள். ஆனால், பொதுமக்கள் முழுமையாக உணர்ந்திருக்கவில்லை. அரசியற் பொறுப்பாளர் திலீபன் அவர்களின் தியாகத்தின் பின்னரே மக்கள் அதை உணர ஆரம்பித் தார்கள்.

அதைப்போன்ற ஒரு சூழலையே இன்று மீண்டும் நாம் எழுக தமிழ் எழுச்சியின் காலத்தில் உணர ஆரம்பிக்கிறோம். உண்மையில் இலங்கை அரசு மட்டும் தான் எமது எதிரியா என்ற கேள்வியை மிக அகலமாகவும் ஆழமாகவும் வைக்கவேண்டிய காலம் இது. ஒரு தலைப்பட்ட சிந்தனைக்குள் மட்டும் நின்று நாம் சிந்திப்பது ஆபத்தாகவும் முடிந்து விடலாம்.

அரசியல் அறிவு செயற்பாட்டாளர்களையும் போராளிகளையும் சிந்திக்க வைக்கும். சிந்திப்பவர்களின் செயற்பாடே முழு மக்களையும் அரசியல்மயப்படுத்தும். இந்த வகையில் தான் திலீபனின் நீராகாரம் எதுவும் அருந்தாத போராட்டமும், குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட வர்களின் தியாகமும் எமது மக்களுக்குச் சில அடிப்படைகளைத் தெளிவு படுத்தின.

இதன் விளைவாக, வெல்லமுடியாது என்று கட்டியம் கூறப்பட்ட போர் ஒன்றில், உலகின் நான்காவது பெரிய இராணுவத்தைப் பின்னாளில் தமிழர்கள் வென்றார்கள்.

ஆனாலும், 1980 மற்றும் 1990 களில் இந்தியா தொடர்பாக ஏற்பட்டிருந்த சிந்தனையின் மிக முக்கியமான ஒரு பக்கவிளைவாக மேற்குலகு மீதான நம்பிக்கை ஈழத்தமிழர்களுக்கு அதிகரிக்க ஆரம்பித்தது.

இந்தியாவைப் போலவே மற்றைய உலக வல்லரசுகளும் ஈழத்தமிழர் விவகாரத்தில் நடந்துகொள்ளும் என்பதை தாக்கமான முறையில் எழுதி மக்களுக்கு முற்கூட்டியே அறிவு கொடுப்பதற்கு வெகுஜனத் தளத்தில் இயங்கிய சிந்தனையாளர்கள் பெருமளவில் தவறிவிட்டார்கள் என்று நினைக்கிறேன்.

தேசியத் தலைவர் அவர்கள் இது விடயத்தில் மிகவும் தெளிவான சிந்தனையைக் கொண்டிருந்தார் என்பதை நாங்கள் வன்னியில் இருந்தபோதே உணர்ந்திருந்தோம். ஆனால், அவர்கள் உள்ளிருந்த சிந்தனைகளையும் இரகசியங்களையும் தமது அறிவையும் தாம் எடுக்கும் முடிவுகளுக்குப் பயன்படுத்தினார்கள். அவற்றைப் பகிரங்கமாக வெளிப் படுத்தும் சூழலில் அவர்கள் இருக்கவில்லை. இயக்கத்திற்கு அப்பாற்பட்ட நிலைகளில் இருந்தே சுயாதீனமாக ஆய்வுகளும் சிந்தனைகளும் வரவேண்டியிருந்தது.

இந்தவகையில் பிரபல இராணுவ ஆய்வாளரான மாமனிதர் சிவராம் அவர்கள் பேச்சுவார்த்தை அரசியல் குறித்த சிக்கலான சர்வதேசப் போக்குகள் குறித்த கருத்துக்களை தொடர்ச்சியாக வீரகேசரியில் எழுதியிருந்தார். இது வன்னியில் பல மட்டங்களிலும் ஆழமாகப் படிக் கப்பட்டுவந்தது என்பதையும் நான் அறிந்திருக்கிறேன்.

இந்தியா விவகாரத்தில் திலீபனின் தியாகத்தூடாக உணர்ந்ததை, பின்னர் 87 இல் இருந்து 90 வரை பல உயிர்களின் இழப்பிலும் தியாகத்திலும் உறுதிப்படுத்திக்கொண்டதை, முள்ளிவாய்க்காலில் 40 நாடுகள் ஒன்றாய் நின்று இன அழிப்புக்குத் துணைபோனதைப் பார்த்தபோது தமிழ் உலகம் மீண்டும் ஒருமுறை அறிந்துகொண்டது.

சாட்சியங்கள் அற்ற போர் அல்ல வன்னியில் நடந்தேறிய இன அழிப்புப் போர். 40 நாடுகளின் சாட்சியம் உண்டு. அவற்றில் கணிசமானவை வெளிவரும். விக்கிலீக்ஸில் வந்தவையும், கிலறி கிளின்ரனின் மின்னஞ்சல்களில் இருந்து வரவேண்டியவையும் என்று பல தொடர்பாக நாம் அறிந்திருக்கிறோம். இன்னும் பல இருக்கின்றன. அவையும் வரும். ஐரோப்பாவில் தடையைக் கொண்டுவந்து பேச்சுவார்த்தைக்கு முட்டுக் கட்டை போட்ட பிரித்தானியா இன்று ஐரோப்பிய யூனியனுக்குக்கு வெளியே.

உலகம் நீதியின் அச்சில் இயங்கவில்லை என்பதை மீண்டும் நாம் முள்ளிவாய்க்காலில் உணர்ந்துகொண்டோம். ஆனாலும், உலகம் தொடர்ச்சியாக அநீதியின் அச்சிலேயே இயங்குவதில்லை என்பதும் வரலாறாகும்.

இது ஈழத்தமிழர் விடயத்திலும் உணர்த்தப்பட்டுவருகிறது, உணர்த்தப்படும் என்று நான் ஆழமாக நம்புகிறேன்.

அமெரிக்காவில் அடுத்து தேர்தல். அங்கே என்ன நடக்கப்போகிறது. விரைவில் தெரிந்துவிடும்.

முள்ளிவாய்க்காலில் முழுத் தமிழ் உலகமும் எழுந்து நின்ற போதும் இறுதிக்கணங்களிலும் சர்வதேசம் எம்மை வந்து காப்பாற்றும் என்று எதிர்பார்த்துக்கிடந்த எமது மக்களுள் நானும் ஒருத்தியாக இருந் திருக்கிறேன்.

உலகின் பொய்மைத் தலைவர்களின் மாற்றத்திற்கான குரல் முள்ளிவாய்க்கால் இன அழிப்பை தடுத்து நிறுத்தத் தவறியது.

உண்மையில் வன்னியில் ஈழத்தமிழர்கள் தோற்கவில்லை. உலக மானுடமே அங்கு தோற்றது. இதை நிச்சயம் வரலாறு பதிவு செய்யும்.

முற்கூட்டியே சொல்வது கட்டியம். நடந்து முடிந்தபின் எழுதப்படுவது வரலாறு.

கட்டியங்களுக்கும் வரலாறுகளுக்கும் அப்பால் போராட்டம் என்பது உண்மையாலும், நம்பிக்கையாலும், துணிவாலும் கட்டப்படுவது.

கட்டியங்களுக்கும் வரலாற்றுக்கும் இடை நடுவில் செயற்படுபவர்களே அரசியல்வாதிகளும் அரசியற் போராளிகளும்.

சில ஒருதலைப்பட்சமான கட்டியங்களையும் கற்பனைகளையும் வைத்துக்கொண்டு வரலாற்றுச் சில்லை மீண்டும் பின்னோக்கிச் சுற்றிக்கொண்டிருந்தால் எம்மைப்போன்ற ஒரு சிறிய தேசிய இனம் கட்டமைப்பு, பண்பாட்டு இன அழிப்புக்கு உள்ளாக்கப்பட்டு வேகமாக அழிக்கப்பட்டுவிடும்.

சர்வதேச விசாரணை நடந்து முடிந்துவிட்டது என்று வியாக்கியானம் கொடுத்த வக்கீல்களுக்கு இது புரியாது.

இலங்கை அரசின் கட்டமைப்பு இந்தியாவுக்கு எதிரான முனைப்போடு செயற்படுகிறது என்ற செய்தி இந்த ஆய்வு நூலில் முன்வைக் கப்படுகிறது.

அதேவேளை, இந்திய அரசின் இந்துத்துவமும், சிங்கள அரசின் தேரவாத பௌத்தமும் ஒத்திசைவோடு இயங்குகின்றன. சமயங்களை வைத்துச்

சண்டையில் ஈடுபட்டிருக்கும் மேற்குலக நாடுகளும் இங்கு ஒத்திசைவோடு இயங்குகின்றன.

அடிமட்டத்தில் மக்களாகிய நாம் இதன் சூட்சுமங்களைப் புரிந்தவாறு எமக்குள் ஒத்திசைந்து இயங்கவேண்டும்.

இலங்கை அரசாங்கத்தோடு இரகசிய பேச்சு நடத்தி தந்தை செல்வாவாலேயே முடியாமற்போன சமஸ்டியை பெற்றுவிடமுடியும் என்று எவரும் தமிழர்களின் காதுக்குப் புதிதாகப் பூவைக்கவேண்டிய அவசியம் இல்லை.

உண்மை என்னவென்றால் பாராளுமன்ற அரசியலுக்கு அப்பாற்பட்ட அழுத்தமே இலங்கை அரசைப் பணியவைக்கும்.

இதை ஆயுதப் போராட்டம் செய்து முடிந்தாயிற்று. இனி வேறு வழிகளில், பிராந்திய, உலகளாவிய முன்னெடுப்புகளூடாக அந்த அழுத்தத்தை இலங்கை அரசுக்குக் கொடுத்து, 'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி' என்ற நிலைக்கு இலங்கை அரசைக் கொண்டுவந்தால் மாத்திரமே சம்ஸ்டி சாத்தியமாகலாம்.

இதற்கான வேலைத்திட்டத்தை வகுப்பதற்கு உலகளாவிய தமிழர்கள் ஒன்றித்துச் சிந்திக்கவேண்டும். வல்லாதிக்கங்களின் பிடியில் இருந்து விடுபட்டு சுயாதீனமாகச் சிந்திக்கவேண்டும்.

இதைப்போன்ற ஆய்வு நூல்கள் இன்னும் பல சுயாதீனமாக வெளிவரவேண்டும் என்ற எதிர்பார்ப்போடு எனது உரையை நிறைவு செய் கின்றேன்.

நன்றி.